மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட, அப்படிப்பட்ட 27 கோயில்கள் மட்டுமல்ல, நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இன்னும் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களை இந்தத் துறையினுடைய பொறுப்பிலே நாம்கொண்டு வர வேண்டும். அது மட்டுமல்லாமல், மத சம்மந்தமான கட்டளைகள் அன்ன தானம் செய்வது அல்லது வேத பாடசாலைகள் நடத்துவது, இப்படிப்பட்ட கட்டளைகள் கூட ஏராளமாக தனியார் பொறுப்பிலே இருக்கின்றன. ஏற்கனவே பிற மாநிலங்களில், ஆந்திரா போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட அறக்கட்டளைகள் அறநிலையத் துறை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட வேண்டுமென்று ஏற்கனவே சட்டம் போட்டு செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய மாநிலத்திலே இருக்கிற மத சம்பந்தமான கட்டளைகள் அத்தனையையும் இலாகாவினுடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று அரசாங்கத்திலே ஆலோசனை செய்து கொண்டு வருகிறோம்.

இந்தக் கோயில்களைப் பொறுத்தவரையில், எல்லாக் கோயில்களையும் நம்முடைய துறையின் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலே இந்த ஆண்டு 21,000 கோயில்களை இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறோம்.

சூணம்பேடு கிராமத்தில் சமுதாயக் கூடம்

* 599 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தாலுக்காவிலுள்ள சூணம்பேடு அரிசன குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: மதுராந்தகம் தாலுக்காவிலுள்ள சூணம்பேடு அரிசனக் குடியிருப்புப் பகுதியில் 1974–75-ம் ஆண்டில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஏற்கனவே உத்தரவு பிறப்பித்துள்ளது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, 1973–74–லேயே இந்தச் சமுதாயக் கூடம் அமைப்பதாக இருந்தது. 1974–75–லே தீர்மானிக்கப் பட்டது. அது விரைவிலே முடிவடையும் என்கின்ற உத்தரவாதத்தை அரசு அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி அன்று அதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதை யார் செய்வது என்ற முறையில் விவாதம் வந்தபொழுது, 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி அன்று நம்முடைய தமிழ் நாட்டு வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகமே அந்தக் கட்டிட வேலையை முடிக்க வேண்டுமென்று அரசு கேட்டுக் கொண்டுள்ளது.